www.Padasalai.Net www.TrbTnpsc.com

9 ஆம் வகுப்பு - தமிழ் இரண்டாம் பருவம்
மெல்ல கற்கும் மாணவர்களுக்கான வினா- விடைப் பகுதி

குறுவினாக்கள் :

1)தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது ?
இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், பெண்கல்வி பெறுதல் முதலியன.

2) மூவாது மூத்தவர், நூல் வல்லார்- இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
நன்மை ,தீமைகளை உணர்ந்தவர்கள் இளையவராக இருந்தாலும் அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே.

3) நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை ?
திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

4) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது ?
பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருக்கும் குழந்தைத் திருமணத்தைத் தடுக்க இயற்றப்பட்டது.

5) கோத்தாரி கல்விக்குழு எதனை வலியுறுத்துகிறது ?
கோத்தாரி கல்விக்குழு மகளிர் கல்வியை வலியுறுத்துகிறது.

www.Padasalai.Net

6) மதுரைக்காஞ்சி- பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
* பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
* காஞ்சி என்பதன் பொருள் நிலையாமை.
* மதுரையின் சிறப்புகளையும் நிலையாமையையும் பாடும் நூல்.

7) எதன் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது ?
வாணிகத்தின் பொருட்டு கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

8) பண்டைத் தமிழர்களின் துறைமுகப் பயன்பாடு யாது ?
போர், வணிகம் போன்ற காரணங்களுக்காகப் பயன்படுத்தினர்.

9) நாலுமலை கொண்ட பெருநகரம் - இதில் குறிக்கப்படும் மலைகள் யாவை ?
ஆனமலை, நாகமலை, பசுமலை, சமணமலை

10) செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
கடவுளின் உருவங்கள், மனித உருவங்கள் மிகுந்த கலைநுட்பத்தோடு செப்புத் தகட்டில் வடிவமைக்கப்பட்டன. சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன.இவர்கள் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

11) நடுகள் என்றால் என்ன ?

போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடப்படுவது நடுகள்.அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும்.

12) இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை ?

விஜயநகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டவை.

13) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது ?

கண்ணன் புகுந்த பந்தலில் முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

14) இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்புத் தருக.

இடிகுரல் - உவமைத்தொகை
பெருங்கடல் - பண்புத்தொகை

15) பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன ?

சிறுவர்கள் பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு கோலினால் அடித்தனர். அவ்வோசைக் கேட்டு அஞ்சி பருந்துகள் பறந்தன.

சிறுவினாக்கள் :

1) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், பொன்முடியார்
வெண்ணிக் குயத்தியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார்
காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

www.Padasalai.Net

2) சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்.

அ) இன்பம் சமைப்பவர் யார் ?

பெண்கள், ஆண்கள்

ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா ?

சமைப்பது தாழ்வில்லை. சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

3) விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன.

அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

4) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

* தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
* இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

* சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்.
* சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்.
* அடையாற்றில் அவ்வை இல்லம், புற்றுநோய் மருத்துவமனை நிறுவியவர்.

5) நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணியின் சிறப்புக் குறித்து எழுதுக.

தந்தை மறைமலையடிகள் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்.

எழுதிய நூல்கள் : தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்- தமிழ் அகரவரிசை முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர்.

தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு இவர் நூல்கள் பயன்தரும்.

6) மாகால் எடுத்த முந்நீர்போல - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : மதுரைக்காஞ்சி

பொருள் : மதுரையில் நிகழும் விழா பற்றி முரசறைவோன் கூறும் முழக்கமானது பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது.

7) கொற்கை - சிறுகுறிப்புத் தருக.

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம்.

இங்கு முத்துச்சிப்பிகளும், சங்குகளும் உண்டாயின

செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள் குவிந்திருந்தன.

இங்கு பாண்டியர்களின் நாணயங்களை அச்சிடும் பட்டறைகள் இருந்தன.

www.Padasalai.Net

8) காவிரிப்பூம்பட்டினம் குறித்து இலக்கியங்களில் இடம்பெற்ற கருத்துகள் யாவை?

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோர் கிள்ளிவளவன் ஆட்சிக்காலத்தில் புகாரில் வாழ்ந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் செல்ல இருந்த பண்டங்கள் மலைகள் போல் குவிக்கப்பட்டிருந்தன என்கிறது பட்டினப்பாலை.

புகார்நகரத்தில் காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருந்துள்ளது.

9) முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது ?

முழு உருவச் சிற்பங்கள் :

உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்தவை.

புடைப்புச் சிற்பங்கள் :

முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

10) நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை ?

அழகிய ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். மதுரை ஆலய ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் உள்ள அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயம் மிக்கவை.

பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு.

11) இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

தும்பியானது பல இடங்களுக்குச் சென்று பின் பெண்களின் முகத்தினை நோக்கிச் செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சிபோல் உள்ளது.

12) ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக.

மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன.

வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர்.

கண்ணன், முத்து மாலைத் தொங்கும் பந்தலின் கீழ் திருமணம் செய்துகொள்கிறார்.

13) குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் மணம்

உலையிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணம்

ஆகியவற்றால் குறிஞ்சி மணக்கிறது.

www.Padasalai.Net

தயாரிப்பு : எஸ்.ஜெயசெல்வன்,
தி.ஆ.மே.நிலைப்பள்ளி,
திருவிடைமருதூர்.
9443740120

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html